# 31ம் நாள் நினைவு மலர்

06.09.2020



07.08.2020 அன்று சிவப்பேறடைந்த
எங்கள் அன்புத்தெய்வம்
அமரர்

## இளையதம்பி வள்ளியம்மை

(ஓய்வுபெற்ற கமநல சேவை எழுதுநர்
அறநெறிப் பாடசாலை ஆசிரியர்)
அவர்களின் நினைவின் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மானிடராய் பிறந்து வந்து
மனிதருள் மாணிக்கமாய்
இறைபணிகள் செய்து கொண்டு
இறைவனையே பணிந்து என்றும்
மனிதம் காத்து நின்று
மகத்தான வாழ்வு கண்டு
மங்காத புகளோடு
மானிலத்தில் வாழ்ந்திருந்து
வாழ்ந்த காலம் போதுமென்று
வந்த வழி செல்வதற்கு
விரைவாக நாள் குறித்து 07.08.2020ல்
அமரத்துவமடைந்த எங்கள் மாசில்லா தெய்வம்

**அமரர் இளையதம்பி வள்ளியம்மை**

அவர்களின்
31ம் நினைவு நாளில்
அன்னாரின் நீங்காத நினைவுகளை மீட்டு
என்றுமே நிலைத்திருக்க
இம்மலரை அன்னாரின் பாத கமலங்களில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவு



தோற்றம்
27 . 12 . 1940

மறைவு
07 . 08 . 2020

அமரர்

## இளையதம்பி வள்ளியம்மை

(ஓய்வுபெற்ற கமநல சேவை எழுதுநர்,
அறநெறி பாடசாலை ஆசிரியர்)

### திதிவெண்பா

சாதனை மிகு சார் வருட அன்னையின்
மாதமாம் ஆடி இருபத்து மூன்றில் சாதாரண
இருள் சூழ் சுக்கில பக்ஷ சதுர்த்தி திதி
உத்திரட்டாதி நட்சத்திரத்தில்
பார்போற்ற வாழ்ந்த வள்ளியம்மை
விண்ணுலக சிவபதம் அடைந்த நாள் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி யோர் தூவெண்மதிசூடி(க்)
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன்ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரியாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றது ஆர் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை
மணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தி தரும் காரிய சித்திமாலை

எல்லாக் காரியங்களுக்கும் தெய்வ திருவருளே மூல காரணமாக உள்ளது. நாம் ஒரு காரியத்தை தொடங்கும் முன் இடையூறின்றி இனிதே நிறைவேறல் செய்பவர் விக்னேஸ்வரராவார். விக்கினங்களைத் தீர்த்து சித்தி அளிப்பதனால் சித்தி விநாயகர் எனப் போற்றி வணங்கப்படுகிறார்.

முன்னாளில் காசிபமுனிவர் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு எட்டுப் பாடல்களை ஒவ்வொன்றும் எட்டுவரி கொண்டு அமைந்தனவாக அமைத்து பாடியருளினார். மனம் மகிழ்ந்த எம் பெருமான் காசிபமுனிவர் முன் தோன்றி அன்பரே, நீ நம்மீது பாடிய இப்புகழ்ப்பாக்களை எவரேனும் நினைத்து காலை நண்பகல், மாலை என்னும் மூன்று வேளை எம்மை நினைத்துப் பாடுவாராயின் அவர்களுடைய காரியங்கள் யாவும் சித்தியடையும். மேலும் சதுர்த்தி விரதநாளில் மன ஒருமைப்பாட்டுடன் எட்டுமுறை பாடுவாரானால் எண் வகைச் சித்தி கைகூடும் என்றும் இவ்வாறு மட்டுமின்றி எட்டு நாட்கள் பாடினால், மனம் மகிழுமாறு நன்மைகள் அடைவார்கள் என்றும், இரண்டு மாதங்கள் நாள்தோறும் பத்து முறைபாடினால் பாடியவர்களுக்கு அரச வசியம் உண்டாகும் இரண்டு மாதங்கள் நாள்தோறும் இருபத்தொரு முறை பாடுவோர் அரசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம் என்னும் எண்வகைச் செல்வங்களையும் அடைவர் என்று கூறி அருள் செய்து சித்தி விநாயகர் மறைந்தார். என நூற்பயன் கூறுகிறது. மானிடர்களாகிய நாம் தூய மனத்துடன் எல்லாம் வல்ல தனக்கு மேல் ஒரு தலைவரில்லாத விநாயகப் பெருமானை மன ஒருமைப்பாட்டுடன் சரணடைபவர்களை காத்து, காரியங்களில் சித்தி கொடுத்து அருளும் காரியசித்தி மாலையை பாடுவதற்குமுன் சரணடையும் பிள்ளையார் துதியைப்பாடி பின் காரியசித்தி மாலையைப் பாடுதல் வேண்டும்.

## பிள்ளையார் துதி

வலமையை மருவிய புயதரசரணம்
வடிவினிலுயரிய பெரியவ சரணம்
முறைதெரு மறையவ நிறையவ சரணம்
முடியடி தெரியவரு முதியவசரணம்
சரணம் சரணம் கணபதி சரணம்
சரணம் சரணம் கஜமுக சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்தி மாலை

**இயற்றியவர் : காசிப முனிவர்**

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம் 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன்அந்த
உலகு முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம் 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னானும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம் 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம் 8

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம் பெறும்என்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும் 9

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ் ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார் 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION ASHRAMA & CHILDREN HOMES**
**BATTICALOA, SRI LANKA.**
T.P.; 0094 65 2222 752, rkmbat@gmail.com

# இரங்கல் செய்தி

அன்பு, பொறை, அடக்கம், தன்னலம் கருதாத சேவை போன்ற பண்புகளைத் தம்மகத்தே கொண்டு "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற கோட்பாட்டிற்கமைய வாழும் பெரியோர்களாலேயே இவ்வுலகம் நிலை பெற்று வாழ்கிறது என்று கூறின் ஐயமில்லை.

நான் அறிந்துகொண்டதற்கிணங்க செல்வி இளையதம்பி வள்ளியம்மை அவர்கள் மேற்படி பண்புகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து அவரது 79 ஆவது அகவையில் 2020.08.07ந் திகதியன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகஹம்சரின் அருளாசிக்கமைய பாலர்களுக்கு சமய நெறியையும், ஒழுக்க விழுமியங்களையும் புகட்டி, சமுதாயத்தில் நற்பிரசைகளாக வாழவைக்கும் நோக்கில் ராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமயப் பாடசாலையில் ஆரம்பகால ஆசிரியராக இணைந்துள்ளார். அத்தோடு சுமார் 50 வருடகாலம் மாணவர்களின் ஒழுக்கக் கல்விக்காக தன்னலம் கருதாத சேவையை வழங்கினார் என்பதை எண்ணிப்பார்க்கும் போது வியக்காமல் இருக்கமுடியாது.

அத்துடன் சிறு பராயத்தினரை அன்புடன் அரவணைத்துக் கற்பித்தலில் வெற்றி கண்டதால் பிற்காலத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகவும் பணியாற்றி இப் பிரதேசத்தில் பல வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் மற்றும் கல்விமான்களையும் உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். வளர்ந்து வரும் சமுதாயத்தில் தன்னலம் கருதாத சேவையை ஆற்ற முன்வருபவர்களுக்கு செல்வி இளையதம்பி வள்ளியம்மை அவர்களின் சேவையும் பண்பும் ஒரு சிறந்த உதாரணமாகும்.

அன்னார் மேற்படி சேவைகளுடன் நின்றுவிடாது ராமகிருஷ்ண மிஷனால் தெய்வத் திருமூவர் பெயரால் நடாத்தப்பட்ட சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளிலும் தவறாது பங்கு கொண்டு தன்னாலான பணிகளை ஆற்றி தனது ஆத்ம ஈடேற்றத்தையும் வளர்த்துக் கொண்டார்.

"ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாய ச"

"சொந்த ஆத்ம ஈடேற்றத்திற்காகவும், உலக நன்மைக்காகவும் வாழ்வை அர்ப்பணிப்பாயாக" என்பது சுவாமி விவேகானந்தர் வழங்கிய வாழ்க்கை நெறியாகும். சுவாமி அவர்களின் மேலான இந்த ஆணையைப் பின்பற்றி ராமகிருஷ்ண மிஷனின் சிறந்த பக்தராகவும், தொண்டராகவும் தனது இறுதிக்காலம் வரை பணியாற்றிய ஆன்மீகப் பெருவாழ்வு வாழ்ந்த செல்வி இளையதம்பி வள்ளியம்மை அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு இந்த இழப்பை தாங்கக்கூடிய மனவலிமையை கொடுக்கவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

சிவபதம் அடைந்த அன்னாரின் ஆன்மா இறைவனின் பாதாரவிந்தங்களில் பரிபூரண சாந்தியடைய பரமேஸ்வரனை வேண்டுகின்றோம்.

என்றும் மனிதகுல சேவையில்

(சுவாமி தக்ஷஜானந்தர்)
பொது முகாமையாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்த சபை உறுப்பினர் செல்வி இளையதம்பி வள்ளியம்மை

01.02.2009 ம் திகதி முதல் 01.08.2013 வரையிலான காலப்பகுதியில் மட்/மண்முனை வடக்கு 222 மத்தியஸ்த சபை உறுப்பினராக சேவையாற்றியுள்ளார். மத்தியஸ்த செயல் வழியில் அமைந்த அன்னாரது அணுகுமுறையும் செயலாக்கமும் மத்தியஸ்த வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒருவராக இடம் பிடிக்க வைத்துள்ளார். மத்தியஸ்த சபையின் சக உறுப்பினர்களுடனும், பிணக்காளர்களுடன் அன்புடனும், கனிவுடனும் அணுகும் முறை, குடும்பப்பிணக்குச் சார்பாக தன்னால் வழங்கப்படும் ஆலோசனையும் வழிகாட்டலும், இரு திறத்தாரையும் இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவர அவர் எடுக்கும் அயராத உழைப்பு, பக்கச்சார்பற்ற தன்மை, நடுநிலை தவறாமை தவிசாளருக்கு அவ்வப்போது அமர்வுகளுக்கான கோவைகளை ஒழுங்குபடுத்தல், வேளைக்குச் சமுகமளித்தல் போன்ற காரணங்கள் அவரை மட்/மண்முனை வடக்கு 222 மத்தியஸ்த சபை வரலாற்றில் நீங்கா இடம்பெறவைத்துள்ளது. இத்தகு சேவையாளரை மேற்படி மத்தியஸ்த சபை ஓர் உறுப்பினராக உள்வாங்கியமை பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம். இத்தகு ஆற்றல் மிகு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நாங்கள் பிரார்த்திக்கின்றோம்

மத்தியஸ்த சபை
மண்முனை வடக்கு 222
மட்டக்களப்பு

**(தவிசாளர்.S.விஷ்ணுமூர்த்தி)**

## எண்ணித் துணிக

பேசுவதற்கு முன் செவி கொடுங்கள்
எழுதுவதற்கு முன் சிந்தியுங்கள்
குறைகூறுவதற்கு முன் பொறுத்திருங்கள்
பிரார்த்தனை செய்யுமுன் மன்னியுங்கள்
எதையும் கைவிடுமுன் முயலுங்கள்
மரணத்துக்கு முன் மற்றவர்க்கு உதவுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்குறிப்பு

அமரரான காலம் சென்ற இளையதம்பி வள்ளியம்மை அவர்கள், மட்டக்களப்பு கல்லடி உப்போடையை பூர்வீகமாக கொண்ட நாகப்பர் இளையதம்பிக்கும் மாரிமுத்து தங்கம்மாவிற்கும் கனிஷ்ட புதல்வியாக **27.12.1940**ம் ஆண்டு பிறந்தார். அவர் பொன்னம்மா, இராசம்மா ஆகிய இரு சகோதரிகளுக்கும், செல்லையா அவர்களுக்கும் தங்கையாக பிறந்து வாழ்ந்து வந்தார்.

இவர் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த பத்திர வகுப்பு வரை கல்லடி உப்போடை விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்றார். பாடசாலைப் பருவத்தில் கல்வியில் சிறப்புற்று முதல் மாணவியாக திகழ்ந்த இவர், தனது தந்தையை இவரது **16**வது வயதில் இழந்ததால் கல்வியை தொடர முடியவில்லை. இதன் காரணமாக மேற்கொண்டு உயர்கல்வியை தொடர சந்தர்ப்பம் அமையவில்லை.

இவர் தானொரு ஆசிரியராக வரவேண்டும் என்ற இலட்சியத்துக்காக கடுமையாக முயற்சித்தும் அந்த இலட்சியம் கைகூடவில்லை. இருந்த போதிலும் தனது இலட்சிய கனவினை, அவர் தனிப்பட்ட நிலையில் சிறுவர்களுக்கான ரியூசன் வகுப்புக்களை நடத்தி வந்தார். இதில் ஆத்ம திருப்தியையும், ஊதியத்தையும் பெற்றுவந்தார். இவ்வகுப்பை உடல் தளர்ச்சி அடையும் வரை தொடர்ந்தும் நடாத்தி வந்தார். இக்கால கட்டத்தில் **1960**ம் ஆண்டு தாயார் தங்கம்மா அவர்கள் காலமானதன் பின்னர் அவர் சிறகொடிந்த பறவையாகி, தன் சகோதரன் செல்லையா அவர்களுடன் சகோதரி இராசம்மா குடும்பத்தின் நிழலில் வசித்து வந்தார்.

ஆசிரியர் தொழில்தான் தன் இலட்சியம் என்பதை நிறைவேற்றிக் கொள்வதற்காக அக்காலகட்டத்தில் மூன்று பேருடன் சேர்ந்து மஞ்சந்தொடுவாய் கொலணியில் பாடசாலை அமைத்து படிப்பித்து வந்தார். இந்நடவடிக்கையால் தன்கையில் இருந்த பணத்தையும் இழந்தார். இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையை அரசு பொறுப்பேற்றதுடன் ஆசிரியர்கட்கு நியமனம் வழங்கவில்லை. அதன் பின்னர் மனம் உடைந்து எதிர்கால வாழ்விற்கு ஆதாரமாக ஏதோவொரு வேலைக்கு செல்வதென முடிவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் விவசாய உற்பத்திக்குழுவில் ஓர் அமைப்பு இலிகிதராக நியமனம் பெற்று சிலகாலம் பணியாற்றி வந்தார். கமநலசேவை உற்பத்திக் குழுவில் வேலை செய்தவர்கட்கு அரசினால் எழுது வினைஞராக நிரந்தரமாக நியமனம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் மனநிறைவு அடைந்தார்.

இ.கி.மிசனில் நடத்தப்படும் சமய வகுப்பிற்கு ஆரம்பம் முதல் கொண்டு 2018 வரை படிப்பித்தார். அவரின் நீண்டகால சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுக் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இது தவிர மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்காக இணக்க சபையிலும் 04 ஆண்டுகளாக ஒரு அங்கத்தவராக பணியாற்றினார்.

இவர் இல்லற வாழ்வில் இணைய விருப்பமின்றி சுதந்திரப் பறவையாய் உற்றார், உறவினர், நண்பர்களுடன் உறவைப்பேணி சந்தோஷமாக வாழ்வைக்கழித்தார்.

பின்னர் யாருமே எதிர்பாராமல் 07.08.2020 அன்று வெள்ளிக்கிழமை ஆடிமாத தேய்பிறை சதுர்த்தி (சங்கடகர சதுர்த்தி) திதியில் இறைபதமடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தொகுப்பு
பெறாமகள்
**செல்லத்தங்கம்**

## மூன்றால் முன்னேற . . .

| | | |
|---|---|---|
| தவிர்க்க வேண்டிய மூன்று | - | புகைத்தல், குடித்தல், சூதாடல் |
| அடக்க வேண்டிய மூன்று | - | நாக்கு, கோபம், ஆசை |
| கவனிக்க வேண்டிய மூன்று | - | பேச்சு, நடைமுறை, செயல் |
| ஒழிக்க வேண்டிய மூன்று | - | திருட்டு, பொய், சோம்பல் |
| ஆதரிக்க வேண்டிய மூன்று | - | வாக்குறுதி, நட்பு, அன்பு |
| மதிக்க வேண்டிய மூன்று | - | முதியோர், மார்க்கம், சட்டம் |
| நேசிக்க வேண்டிய மூன்று | - | தாய்மை, நேர்மை, கடின உழைப்பு |
| போற்ற வேண்டிய மூன்று | - | தைரியம், மனமகிழ்ச்சி, திருப்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநலசேவையின் மகத்தான பணிகள்

**(அமரரின் சிறப்புப் பரிசு பெற்ற கட்டுரை)**

"உழுதுண்டு வாழ்வாரென்ற" பழுதற்ற வள்ளுவன் வாய்மொழியை உலகோர்க்கு எடுத்தோதும் வண்ணம் சிறந்து விளங்குவது உழவர்தொழிலாகும். இத்தகைய சிறப்புபெற்ற கமத்தொழில் என்பது நெல், தானியங்கள், வாசனைத்திரவியங்கள், காய்கறி, தாவரங்கள், புற்றரைகள், மேய்ச்சல் நிலங்கள், பாற்பண்ணைகள், கால்நடை வளர்த்தல், தாவர பழமரங்கள், நாற்றுமேடைகள் இடல் ஆகியன யாவும் உள்ளடக்கிய தொழிற்பாடாகும்.

இத்தகைய உழவுத்தொழிலை மேற்கொண்டு வாழும் விவசாயிகளின் மேன்மைகளை, நலன்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சேவையே கமநல சேவையாகும். இன்றைய உலகின் சனத்தொகை பெருகி வரும் வேளையிலே உணவு உற்பத்தியானது பெருகுவதற்கும் உலகிற்கும் கமத்தொழிற்கும் ஆற்றவேண்டிய சேவைகள் அளப்பரியனவாகும். பண்டைய மன்னர்கள் காலத்திலே கமத்தொழிலுக்கு எவ்வாறு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டதோ அதே போன்று எமது அரசாங்கமும் வருடந்தோறும் கோடிக்கணக்கான பணத்தை விவசாயத்தின் முன்னேற்றத்திற்காக செலவிடுகின்றது என்பதை நாம் அறிவோம்.

கமத்தொழில் அபிவிருத்தி செய்யும் அதே வேளையில் இளைஞர்களையும், யுவதிகளையும் கமத்தொழிலில் ஈடுபடச் செய்ய பல செயற்றிட்டங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. விவசாயிகளின் நலன் கருதி அவர்களைப் பலவழிகளிலும் ஊக்குவிக்கும் முகமாக பலசங்கங்கள், அமைப்புகளையும் ஏற்படுத்தி உள்ளன. எமது நாட்டின் கமத்தொழில் விருத்தி செய்யும் நோக்குடனே அரசாங்கம் கமநலசேவை திணைக்களங்களை ஏற்படுத்தி அத்திணைக்களத்தின் கீழ் மாவட்டங்கள் தோறும் பல கமநலசேவை நிலையங்கள், விவசாய நிலையங்களின் கீழ் கமநலசேவைக் குழுக்கள், குழுக்களின் கீழ் கமக்காரர் அமைப்புக்கள் என பல பிரிவுகள் ஏற்படுத்தியுள்ளன. எமது மாவட்ட கமநலசேவை திணைக்களத்தின் கீழ் பதினேழு விவசாயநிலையங்களை நிறுவி அந்நிலையங்கள் கமநலசேவை குழுக்கள் மூலம் விவசாயத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள் வறுமையொழிப்பையும் வளமான வாழ்வையும் கொடுப்பதை கொண்டுள்ளது. விவசாயத்திற்கு வேண்டிய அரசாங்கத்தின் மூலதனங்களை அவர்களிடையே கையளித்து உற்பத்தியை பெருக்கி விவசாயிகள் தமது சுயநம்பிக்கையின் தமது அலுவல்களை ஆற்றக்கூடிய ஒரு சம்மேளனத்தை உருவாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். இதனால்தான் நாட்டின் சகல பாகங்களிலும் விவசாய சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ் அமைப்புக்கள் திறமையுடன் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக கமநலசேவை திணைக்களங்கள் இவர்களுக்கு பயிற்சி அளித்து ஊக்குவிப்பும் கொடுத்து வருகின்றன. வளங்கொழிக்கும் நிலையத்தையும் இயற்கை வளங்களையும் கொண்டுள்ள நம் நாடு பொருளாதார துறையில் பின்தங்கி நிற்பதுடன் நமது உணவிற்கும் அத்தியாவசிய தேவைக்கும் அந்நிய நாட்டின் உதவியை நாடி நிற்பதை விட விவசாயிகளை ஒன்றிணைத்து பல சம்மேளனங்களை உருவாக்கி விவசாயத்தை விருத்தி செய்யும் நோக்குடனே செயற்படமுன் வந்துள்ளது. விவசாயிகளுக்கென உருவாக்கப்பட வேண்டிய ஒரு அமைப்பு திருத்தப்பட்ட கமநலசேவை திருத்த சட்டத்தின் 56அ56ஆ பிரிவில் வலியுறுத்தப்பட்டுள்ளன. 1972ம் ஆண்டிலே பயிர்ச்செய்கைக் குழுக்களாக இயங்கி வந்த அமைப்புக்கள் தற்போது பெயர் மாற்றம்பெற்று கமக்கார அமைப்புக்களாக விளங்குகின்றன. இவ் அமைப்புக்கள் அகில இலங்கை விவசாய அமைப்பு, பிரதேச விவசாய அமைப்பு, கமநலசேவைக்குழு விவசாய சம்மேளனம் என பல பிரிவுகளை உள்ளடக்கி பல சேவைகளையும் விவசாயிகளின் உதவிகளையும் வழங்குவதில் முன்னேற்றமடைந்துள்ளன. எமது நாட்டின் 65% மானோர் விவசாயிகள். இவர்களில் கூடுதலான விவசாயிகள் ஏழை விவசாயிகளாக வாழக்காரணம் குறைந்த செலவிலே விவசாயத்தை மேற்கொள்வதாகும். அவர்களுக்கு தேவையான பசளை, மருந்து, நெல் கிடைப்பதில்லை. பெரிய விளைச்சலை பெறுவதற்கு தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியில்லை. ஆனால் தற்போது பல பாகங்களிலும் கமநலசேவை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் தமக்கு தேவையான பசளை, நெல் விதைகள், கிருமிநாசினிகள் யாவும்பெற்று விவசாய விஸ்தரிப்பாளரின் அறிவுரைகளைப்பெற்று விவசாயச் செய்கையில் கூடிய இலாபத்தை பெறுகின்றனர். விவசாயத்தில் ஈடுபடும் இளைஞர்கள் யுவதிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயநிலையங்களாலே வழங்கப்படும் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் விவசாய செயல்முறைகள் ஆகிய பல வழிகளே இதற்கு காரணமாகும்.

## கமநலசேவை குழுக்களின் பணிகள்

கமநலசேவைகளின் திருத்திய சட்டத்தின் கீழ் 10 விவசாய பிரதிநிதிகளையும் 5 அரசாங்க உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய கமநலசேவைக்குழுக்கள் ஒவ்வொரு விவசாய நிலையங்களிலும் பணிகளை மேற்கொள்கின்றன. இக்குழுக்கள் கமநலசேவைகளின் சட்டத்தின் 45, 2(அ) உபபிரிவிற்கிணங்க கமத்தொழில் காணிகளின் பதிவேடுகள் பொது மக்களின் பரிசீலினைக்காக வைக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டிலும் இருமுறை விண்ணப்பங்கள் கோரப்பட்டு நெற்காணி இடாப்புக்களை திருத்தி அமைக்கப்படும். இவ்வேளைகளில் விவசாயிகள் தங்களின் உரிமைகள் ஆட்சேபனைகளைத் தெரிவித்து தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடிகின்றது. பெரும்போக கூட்டங்களை ஒழுங்கு செய்வதும் தீர்மானங்களை சட்டத்திற்கு அமைவாக நிறைவேற்றுவதும் தீர்மானங்களை மீறுவோறுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தலும், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல், நீர்பாசனங்களுக்கு சேதம் விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்ககை எடுத்தல் கமநலசேவைகள் சட்டம் 35ம் பிரிவிற்கமைய விவசாய காணிகளை பயன்படுத்தல், விவசாயிக்கான உள்ளீடுகளை பெற்றுக்கொடுத்தல், அது போன்ற இன்னோரன்ன பல பணிகளை குழுக்கள் மேற் கொள்கின்றன. இத்துடன் காணிப்பிரச்சினை, கால்நடைப் பிரச்சினை, குத்தகை வழங்கல், வேலிப்பிரச்சினை போன்ற பலவும் கமநலசேவைக் குழுக்களாலே தீர்த்து வைக்கப்படுகின்றன.

கமநலசேவைகளின் சேவைகளாக கமத்தொழில் காப்புறுதிச் சட்டமும் இதனுள் அடக்கப்படுகின்றது. 1973ம் ஆண்டில் விவசாயிகள் அனைவரும் கட்டாயம் தமது பயிர்களை காப்புறுதி செய்ய வேண்டும் என்னும் ஒரு சட்டமும் கொண்டுவரப்பட்டிருந்து தற்போதய புதிய சட்டத்தின் கீழ் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் காப்புறுதி செய்யவோ சேதமுற்ற விவசாயிகளுக்கு நஷ்டஈடு பெறவோ சகல பணிகளுக்கும் விவசாய நிலையங்களையே நாடவேண்டியுள்ளது. விவசாயிகள் காப்புறுதி செய்வதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களுக்கும் குறைந்த அளவிலான இலாபமும் ஏற்படுகின்றன. இது மட்டும் இல்லாமல் விவசாயிகளும் தமது வயோதிப காலத்தில் கஷ்டமின்றி காலத்தை கழிக்க அவர்களுக்கு உதவும் முகமாக விவசாய ஓய்வூதியம் ஒன்றையும் வழங்குகின்றது. ஒருவர் திடீரென மரணமடையும் சந்தர்ப்பத்தில் அவரில் தங்கியிருப்போரின் குடும்ப கஷ்டங்களை தீர்ப்பதற்கு "மரணபணிக்கொடை" என்ற அடிப்படையில் நிதி உதவியும் வழங்கி வருகின்றது. விவசாயிகளின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காக கமநலசேவை நிலையங்களில் கிராமிய மட்டத்தில் கமக்கார அமைப்புக்களை அமைத்துள்ளதால் அவ் அமைப்புக்கள் பகுதி உத்தியோகத்தரின் உதவியுடன் பசளை, விதைப்பொருள், கிருமிநாசினி உபகரணங்கள் யாவற்றையும் பெற்று குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்குகின்றன. நிதி வசதியுடன் கூடிய விவசாய அமைப்புக்களுக்கு கடன் அடிப்படையில் தவணை முறையில் பணம் செலுத்துவதற்கான விவசாய உபகரணங்களை இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் நீர் பம்பிகள் கமநலசேவைகள் திணைக்களம் மூலம் வழங்கப்படுவதால் ஏழை விவசாயிகளின் அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன் குறைந்த வாடகையில் பெற்று விவசாயிகள் பல நன்மைகளைப் பெறுகின்றனர்.

விவசாயக்காணிகளிலும் நீர்பாசனக்காணிகளிலும் கால்நடைகளால் ஏற்படும் பிரச்சினைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு முன்பு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாலே நடமுறைப்படுத்தப்பட்டு வந்தன. தற்போது அவர்களின் சேவை இல்லாத காரணத்தால் கமக்கார அமைப்புக்கள் கமநலசேவைக் குழுக்களாலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கமக்காரர்களின் வருவாயை பெருக்கி அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படச்செய்வது எமது கமநலசேவையின் முக்கிய குறிக்கோளாகும். நீர்ப்பாசன துறைகளிலும் விவசாயிகட்கு தேவையான தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், குளங்கள், கால்வாய்களை அமைத்தல், அணைக்கட்டுகள் போன்ற அடிப்படைத் தேவைகளையும் கண்காணிக்கும் பொறுப்பு கமநலசேவை திணைக்களத்திற்கே உரியதாகும். பெரிய நீர்ப்பாசன, சிறுநீர்ப்பாசன வேலைகளும் கமக்கார அமைப்புக்களாலே ஒப்பந்த வேலை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கமக்கார அமைப்புக்களும் கூடிய இலாபத்தை பெறக்கூடியதாக உள்ளது. விவசாயிகளின் கடன் வசதிகள், தேவையான உள்ளீடுகள் குழுக்களின் அலுவல்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய மூலதனத்தை திரட்டுதல் விவசாயிகளின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் பாத்திரமாதல் ஆகிய பலவிடயங்களில் கமநலசேவையே முன் இடத்தை வகிக்கின்றன. எமது நாட்டின் பொருளாதாரம் மக்களின் ஜீவனோபாய, கலாசாரம் யாவுமே விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. இத்தகைய விவசாயம் மேலும் சிறப்புற்று எமது நாடு வளம் பெற எமது கமநல சேவைகளின் பணிகளே அத்தியாவசியமானதொன்றாகும்.

ஆக்கம்
**செல்வி. இளையதம்பி வள்ளியம்மை**
கமநலசேவை நிலையம்
கல்லடி.

## தானப் பொருட்களும் தானம் செய்வதால் ஏற்படும் பலன்களும்

| | | |
|---|---|---|
| அன்னதானம் | – | தரித்திரமும் கடனும் நீங்கும் |
| வஸ்திரதானம் | – | ஆயுளை விருத்தி செய்யும் |
| பூமிதானம் | – | பிரம்யோக்யதை, ஈஸ்வர தர்சனம் |
| தேன் | – | புத்திரபாக்கியம் |
| கோதானம் | – | ரிஷிகடன், தேவகடன், பிதிர்க்கடன் மூன்றையும் அகற்றும் |
| நெல்லிக்கனி | – | ஞானப்பேறு |
| தீபம் | – | கண்பார்வை தீர்க்கமாகும் |
| அரிசி | – | பாவநீக்கம் |
| நெய் | – | நோய் நீக்கம் |
| பால் | – | துக்க நிவர்த்தி |
| தயிர் | – | ஆண்மை விருத்தி |
| தேங்காய் | – | பூரண நலன், நினைத்த காரியசித்தி |
| பழங்கள் | – | புத்தியும் சித்தியும் கிட்டும் |
| தங்கம் | – | குடும்ப தோஷம் போக்கும் |
| வெள்ளி | – | மனக்கவலை நீக்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது அலுவலகத்தில்



பிரியாவிடையின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துப்பா மடல் வழங்கும் போது...



பிரியாவிடையின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்புச் சேவைக்கான பாராட்டு மடல்கள்...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளி அன்ரி எங்கே சென்றீர்?
# பேர்த்தியின் புலம்பல்

உங்கள் நினைவுகளை எப்படி மறப்பேன் வள்ளி அன்ரி. எனது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த பாசத்தின் உறைவிடம் நீங்கள். அளவற்ற அனுபவ அறிவின் சிகரமென, வழிகாட்டியாய் எம்முடன் வாழ்ந்த காலங்கள் எப்போது இனி வரும்?

உங்களின் இனிய அறிவுரைகள் இன்றும் என் காதுகளில் ஒலிக்கின்றன. எனக்கு ஒரு தாய்போல் அரவணைத்து பாங்கான வாழ்விற்கு வழிகாட்டியவர் நீங்கள். நான் கவலைப்படும் போதெல்லாம் உனக்கு நான் இருக்கிறேன் கவலைப்படாதே என தைரியப்படுத்தியவர் நீங்கள்.

என் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஆசான் நீங்கள் ரேமியைப் படிப்பித்து ஆளாக்குவேன் என்று உறுதியளித்து விட்டு எங்கே சென்றாய் அம்மா............................

நான் என் கனவிலும் கருதவில்லை இவ்வளவு விரைவாக என்னை விட்டு செல்வீர் என்று........ உலகின் உயிர்களை பாசக்கயிற்றினால் பரிதாபமின்றிப் பறித்திடும் இமய தர்மராஜாவிற்கு இராப்பொழு தென்று ஆசை வந்ததோ உன்னை அழைத்து செல்ல....................?

எம் நெஞ்சில் அணையா ஒளி விளக்காய் வீற்றிருக்கும் எமது இதயத் தெய்வமே..........

கடைசி மூச்சுவரை நிதானம் தவறாது வழிப்படுத்திய உங்களை எப்படி மறப்பேன் வள்ளி அன்ரி என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் தாயே!

**சிவநேசன் குடும்பம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவாய்
# பேர்த்தியின் துயர் பகிர்வு

நோயுற்றுடாமல் நொந்து மனம் வாடாமற்
பாயிற் கிடவாமற் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கியெனை யொன் பொருள்
ஐயா நின் சீரடிக் கீழ் வைப்பாள் தெரிந்து,
என்ற பாடலுக்கு இணங்க,

நோய் என்ற பாயில் படுக்காமல்
மாலை வேளையில் கதிரையில் இருந்தபடி
காலனவன் உன் உயிரை கவர்ந்து சென்ற
செய்தி கேட்டு கண் கலங்கி நின்றோம்

அம்மம்மா என்று எங்களை அழைக்கவிடாமல்
உறவுகளின் மூத்த உறவாய் நீயிருந்தும்
உறவு முறை பாராமல் 'வள்ளி அன்ரி' என
உன்னை சொல்ல வைத்தாய்
கன்னியாய் இருந்து இளமையை பேணினாய்

மாதம் ஒரு முறையாவது மறக்காமல் வீடு வந்து
சுகம் கேட்டு அன்பை வளர்த்தாய்
உறவுக் கயிறாய் நீயிருந்து எல்லோரிடம்
சென்று வந்தாய்

கடைசியாய், நீ எங்கள் வீட்டுக்கு வரமாட்டாய் என்று
தெரிந்து தான், என் பிள்ளைகள் இருவரையும் உன் அருகில்
அழைத்து
புத்திமதி கூறிச் சென்றாய்.

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றேன்

அன்புப் பேர்த்தி,
**பிரியகலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிக்கின்றோம் தாயே !

என் அன்னைக்கு அன்ரி, எனக்கும் ஆனாய் வள்ளி அன்ரி
நீ உனக்காய் வாழ்ந்ததை நான் கண்டதேயில்லை - எம்
வாழ்வின் ஏற்றமே உன் வாழ்வின் வண்ணமாய் கொண்டாய்

வடிவாய் எழுத பழக்கினாய் பாலர் பலருக்கு - அவர்கள்
வளர்ச்சி கண்டு பெருமை கொண்டாய் உன் வாழ் நாளெல்லாம்
எடுப்பான சேலை, கொக்கி கைச்சட்டை, சுருள் கொண்டை - அதில்
ஒற்றை ரோஜா என வந்திடுவா வள்ளி அன்ரி எமை வாயார வாழ்த்த

வாய்க்கு ருசியாய் உண்ண உவகை கொண்டாய் - அதனால்
வள்ளி அன்ரி வருவாள் என்று உற்சாகமாய் சமைப்பாள் என் அன்னை
வருடம்தோறும் வரும் சித்திரையில்
வாழ்த்தோடு ஆசிர்வாதம் பெறும் மூத்தோரில் முதன்மை பெற்றாய்

வாரம்தோறும் தவறாமல் வந்தாய் வாசல் தேடி - உன்
வதிவிடம் வருவோருக்கு தவறாமல் தருவாய் விசுக்கோத்தும் சோடாவும் - உன்
வயோதிபத்தின் தள்ளாடலிலும் நோயுற்றோர் நலன் விசாரிக்க
வந்திடுவாய் வாசலுக்கு முதல் ஆளாய் நீ வள்ளி அன்ரி

மீண்டும் எங்களோடு வந்திடுங்கள் என்று நான் அழைத்தேன்
என் மகன் ஓடித்திரிவதனை பார்க்க வருவேன் என்றாய்
வார இறுதியில் நான் ஷனஜித்தோடு உன்னை பார்க்க வர இருந்தேன் - முதல் நாளே
காலன் உங்களை கவர்ந்து செல்வானென்று நான் கனவிலும் நினைக்கவில்லை

தாய்வழி தலைமுறை ஒன்று முற்றாக சரிந்தது எங்கள் வள்ளி அன்ரியுடன்....

நீங்காத நினைவுகளுடன்
அன்புப் பேர்த்தி,
**ஜனார்த்தனி அருள்நாதன் (ஜானி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்கொடு இறைவா!

## மருமகளின் மன்றாட்டு . . .

மாண்பான இலங்கையிலே
தமிழ் மணம் வீசும் மட்டுமண்ணில்
கற்றவர்கள் புடை சூழ்ந்த
கல்லடிப் பதி பிறந்தீரே!

பண்பின் சிகரமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
கடமையில் கண்ணியமாய்
வாழ்வாங்கு வாழ்ந்த தாயே!

கூடியிருந்த வாழ்வையும்
குதூகலித்த மகிழ்வையும்
எங்களுக்காய் தந்துவிட்டு
எங்கு சென்றாய் எம்தாயே!

கதிரவன் போன்ற நீ
காலத்தின் பிடியினில்
கணப் பொழுதில் மறைந்தாயே - எமை
கலக்கத்தில் ஆழ்த்திவிட்டு!

கமநல இலாகாவின் கண்ணியமான எழுதுநர்
மணிமண்டபமதில் மகத்தான சமய ஆசான்
இணக்க சபைதனிலே இனிய நல் தீர்ப்பாளன்
ஓய்வு நேரங்களில் நீ ஓயாத ஆசிரியர். !

இறைவனைப் போல் உனக்கும் நாமங்கள் பலவுண்டு
கடமை நேரத்தில் நீ **"வள்ளியம்மை"**
காலாறும் போது நீ **"வள்ளி ரீச்சர்"**
சமூகம் அழைப்பது **"வள்ளி அக்கா"**
எமக்கு நீங்கள் **"வள்ளி அன்ரி"** !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெழுகுவர்த்தியாக நீங்கள் உருகி
பிறருக்கு ஒளி தந்து மறைந்தீர்களே!
ஏணியும் தோணியுமாக நீங்களிருந்து
எண்ணில்லா மாணவரை உருவாக்கினீர்களே!

"மக்கள் சேவையே மகேசன் சேவை"யென
பொன்னான உங்கள் வாழ்வை புறந்தள்ளி வாழ்ந்தீர்களே!
தமையனுக்காகவும் தங்கைக்காகவும்
தனி மரமாய் இறுதிவரை தவித்து தனித்திருந்தீர்களே!

"மாய்வு" என்பது மாற்றமில்லா தத்துவம்
இறப்புக்கு ஆளாகி இவ்வுடலை நீத்த நின்னுயிர்
அறக்கடவுள் திருவடியில் அன்பால் இணையட்டும்
சுவர்க்கத்தில் நீங்களொரு சுதந்திரப்பறவையாக
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்......... !

அன்பு மருமகள்,
**புவனா**
**(புவனேஸ்வரி சுந்தரமோகன்)**

## வாழ்க்கைத் தத்துவங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழிவைத் தருவது | - | ஆணவம் | நம்முடன் வருவது | - | புண்ணியம் |
| ஆபத்தைத் தருவது | - | கோபம் | பிரியக் கூடாதது | - | நட்பு |
| இருக்க வேண்டியது | - | பணிவு | மறக்கக் கூடாதது | - | நன்றி |
| இருக்கக் கூடாதது | - | பொறாமை | மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு | மிகப்பெரிய தேவை | - | அன்பு |
| கண்கண்ட தெய்வம் | - | பெற்றோர் | மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| செய்ய வேண்டியது | - | உதவி | மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| செய்யக் கூடாதது | - | துரோகம் | மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| நம்பக் கூடாதது | - | வதந்தி | வந்தால் போகாதது | - | பழி |
| நழுவவிடக்கூடாதது | - | வாய்ப்பு | போனால் வராதது | - | மானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வள்ளி அன்ரி
## பெறாமகளின் பிரிவுத் துயர்

அன்புடன் உறவாடி, அறியாமை களைந்தீர்கள்
இன்பமாய் பேசி இதயத்தில் வாழ்ந்தீர்கள்
பண்புடன் நடந்து, பாசமும் விதைத்தீர்கள்
என்றுமே அன்பான வள்ளி அன்ரி நீங்கள்

பொத்துவில்லில் குழந்தையாய் அணைத்து மகிழ்ந்தீர்கள்
வாழைச்சேனையில் சிறுமியாய் சீராட்டி பாராட்டினீர்கள்
கல்லடியில் கல்விக்கு உறு துணையாய் இருந்தீர்கள்
நொச்சிமுனையில் அருகே இன்புற்று வாழ்ந்தீர்கள்

உற்றார், சுற்றம், குழந்தைகள், நண்பர்களுடன்
உரிமையாய், உண்மையாய் உறவாடி மகிழ்ந்தீர்கள்
உங்கள் சொந்தங்களை சொத்தாய் நினைத்தீர்கள்
உங்களை பிரிந்ததால் வேதனையில் வாடுகின்றோம் - இன்று

அண்ணன், அக்காமார், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
அருமைத்தோழி கருணையன்ரி, உயிராய் மதித்தீர்கள் - என்றும்
அயலவர் வெற்றிவேல் அண்ணன், நல்லரெட்ணம் மாமா குடும்பம்
அன்பான அயலவர்கள் வசந்தா அக்கா, தாஸ் அண்ணன், நிவே, வேவி குடும்பம்

உறவும் பரிவும் உங்களுக்கே உரியவை
துறைநீலாவணை, களுதாவளை, காரைதீவு - விருப்பத்திற்குரியவர்கள்
சிறுவர்களை கற்பித்தீர்கள், சீரான அறநெறியுடனே
சிறப்பாக வாழ்வதை கண்டு வாழ்த்தினீர்கள் - மனதார

சுனாமியில் பெற்றோரை ஒரே நேரத்தில்
சடுதியில் இழந்து, பாபு குழந்தைகளை இழந்து
சோர்ந்து தவித்தபோது தாயாய் அளித்தீர்கள் - ஆறுதல்
சகோதரங்கள் மன அமைதி பெறவைத்தீர்கள் அன்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பான கமநலசேவை அரச உத்தியோகத்தராக
அன்பான அறிவான நல் ஆசானாக
கனிவான மத்தியசபை நல் உறுப்பினராக
கருணையுள்ளம் கொண்ட வள்ளி அன்ரி

இறுதிக்காலம் துஷ்யாவுடன் வாழ்ந்த வேளை
இரக்கமாக பார்த்துக் கொண்டனர் குடும்பத்தினரும் - யசோவும்
இனிதே கழிந்த வாழ்க்கை பயணம்
இனிய நல் உறவுகள் என்றும் போற்றின

பெற்ற வாழ்விலே பெருமையும் பெற்றீர்கள்
பெறாமகன் பாபு கடமையும் செய்தான்
குற்றம் இன்றி கூடி வாழ்ந்தீர்கள்
நற்றவம் கிடைக்கவே நமசிவாயனை வேண்டினீர்கள்

இறைவனின் இணையடியில் சேர்ந்து என்றும்
இன்புற்று அமர்ந்து இன்னருளை பெற்று
இறப்பு பிறப்பின்றி அன்பான ஆன்மா
இனிதே சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி . . . சாந்தி . . . சாந்தி . . . !

மகள்
**சுந்தரமதி வேதநாயகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளி அம்மம்மா

வள்ளி அம்மம்மா உங்கள்
பெயர் சொல்லும் போதெல்லாம்
மதுவுண்ட வண்டாக
எனதுள்ளம் தித்திக்கும்.

எனை உமதருகில் இழுத்து வைத்து
எண், எழுத்து புகட்டுகையில்
பாசாங்காய் கண்டிக்கும்
அந்த குருவுள்ளம் தித்திக்கும்.

குருவடிவில் வந்து மூன்றடியில்
உலகளந்த வாமணர் போல்
உங்கள் சிறு உருவில் புதைத்துவைத்த
எண்ணற்ற உறவுகளின் விசாலமது தித்திக்கும்.

செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு எனும்
குறள்வழி நின்று உபசரிக்க வைத்திருக்கும்
சோடாவும், பிஸ்கட்டும் எண்ணுங்கால் தித்திக்கும்.

ஒவ்வொருத்தர் நிலையறிந்து
அவ்வவர்க்கு ஏற்றபடி
ஆதரவாய் அரவணைக்கும்
அன்புள்ளம் தித்திக்கும்.

ஆடம்பரமாக வாழும்
வளம் பெற்ற போதும் கூட
எளிமையை நாடி நின்ற
அந்த இங்கிதம் தித்திக்கும்.

உத்தியோகத்தராய், ஆசிரியையாய்
அறநெறி வழிகாட்டியாய் சேவகியாய்
இணக்கசபை மத்தியஸ்தராய்
பல்பரிமாணம் தந்த முதிர்ச்சி நிலை தித்திக்கும்.

உறவுகளைச் சுமந்து, உறவுக்காய் ஏங்கி
மெழுகாக உருகி நின்ற உயிரோவியம்
உங்கள் உண்மையன்பு இப்போது
இறையோடு இணைந்துவிட்ட "சுபம்" இதுவும் தித்திக்கும்...

அன்புப் பேர்த்தி
**தமிழ்ச்செல்வன் கிமாத்ரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வடிவம் வள்ளி அக்கா

அன்புக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் எங்கள் வள்ளி அக்கா. ஆரம்ப காலத்தில் நாங்கள் அயலவர்களாக வசித்த காலத்தில், எனது உடன்பிறவாத சகோதரியாக, தாயின் உள்ளத்தோடு அவர் காட்டிய கருணையும் பாசமும் மறக்க முடியாதவை. அதே போன்று எனது மனைவி மற்றும் பிள்ளைகளுடனும் பாசத்தைப் பகிர்ந்து கொண்டு அன்போடு உறவாடியவர். எனது குடும்ப நிகழ்வுகளில் சிரத்தையுடன் வள்ளி அக்கா வழங்கிய உதவியும் ஒத்தாசையும் எம் நினைவில் இன்றும் நிழலாடுகின்றன.

வள்ளி அக்காவை நேரம் கிடைக்கும் போது துக்ஷ்யாவின் வீட்டிற்குச் சென்று பார்த்து அளவளாவி வருவேன். அப்போதெல்லாம் எனது உடல் நலம் பற்றியே அதிக கரிசனையுடன் விசாரிப்பார். சிறிது நீண்டகாலம் சந்திக்கச் செல்லாதுவிடின், வீட்டிற்கு தொலைபேசியில் அழைத்து மனைவி அல்லது மகளிடம் சுகம் விசாரித்துக்கொள்வார். இவ்வாறான அக்கறைமிக்க உறவுகளை தற்கால சூழலில் காண்பது மிகவும் அபூர்வமானதாகும். இத்தகைய ஒரு சகோதரியின் மறைவு நம்பமுடியாததாகவே எனக்கு உள்ளது. அவர் இவ்வுலகைப் பிரிவதற்கு சில நிமிடங்கள் முன்னதாக அவரைச் சந்தித்து வந்ததையும் தெய்வசித்தமாகவே கருதுகின்றேன்.

மிகநீண்டகாலம் இப்பிரதேச குழந்தைகளுக்கு அரிச்சுவடிக் கல்வியினையும், அறநெறிக் கல்வியினையும் கனிவும் கண்டிப்புமாக கற்றுக் கொடுத்து சிறந்ததொரு ஆசிரியையாகப் பெயர் பெற்றவர். தனது அரசசேவையினையும் சிறப்பாகச் செய்தது மட்டுமன்றி அப்பணியின் மூலமாக நான் உட்பட பலருக்கும் தன்னால் முடிந்தளவு உதவிகளையும் பெற்றுக் தந்துள்ளார். தனது உறவினர், சுற்றத்தினர் அனைவருக்கும் பக்கபலமாக செயற்பட்டவர். இவ்வாறு பன்முக ஆளுமை கொண்டவராக விளங்கியவர் வள்ளி அக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தன்னலமற்ற அன்பினாலும், தயாள குணத்தினாலும், விருந்தோம்பற் பண்பினாலும் தனித்துவமான பெண்மணியாக வாழ்ந்தது மட்டுமன்றி, அநேக மக்களின் அன்பைப் பெற்றவராகவும் வாழ்ந்துள்ளார் என்பதற்கு அவரது இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட அளவற்ற மக்களின் கண்ணீரே சாட்சியாகும்.

வள்ளி அக்கா இவ்வுலகை விட்டு மறைந்தாலும், அவரது கம்பீரமான பேச்சும், கனிவான குணமும், பிரதிபலன் எதிர்பாராது செய்த உதவிகளும் எம்மனங்களில் என்றும் நீங்காது நிறைந்திருக்கும்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

**அன்புத் தம்பி – வெற்றி**

**விளக்கேற்ற உகந்த திரி வகைகள்**

- ✓ வாழைத்தண்டு நார்த் திரி
- ✓ பருத்திப் பஞ்சுத்திரி
- ✓ தாமரைத் தண்டுத் திரி
- ✓ வெள்ளை எருக்கம் இலைத் திரி
- ✓ மஞ்சள் மற்றும் சிவப்பு சேலைத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளி அன்ரியும் நானும் - வாழ்க்கைக் கண்ணோட்டம் பெறாமகனின் மனக் குமுறல்

இப்போதும் எனக்கு நினைவு நீங்கவில்லை
நான்கே வயதான நல் இளம் பாலகன் நான்
கல்வி என்னும் மகுடம் சூட - என்னை
பெற்ற தாய் தாரைவார்த்தாள் பெறாத தாயிடம்

தங்கைக்காக தமையனும் தமையனுக்காக தங்கையும்
போட்டி போட்டு தம் வாழ்வை அர்ப்பணித்த நிலைகண்டு
வியந்தேன், மகிழ்ந்தேன், பாராட்டினேன் - அன்றிலிருந்து
அன்பான அக் கூட்டிற்குள் நானும் ஒரு சிறு குருவியானேன்.

"வள்ளி அன்ரி" அப்படித்தான் அறிமுகம் செய்தார்கள். அழைப்பதற்கு
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
மிடுக்கான பேச்சும் நேரிய சிந்தனையும்
ஒழுக்கம், விழுமியம், இங்கிதம் என அவரின் நற்பண்புகளை
அடுக்கிக் கொண்டே போகலாம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேரமுகாமைத்துவம் இவையே
அவரின் உயிர் மூச்சுகள்
அம்மாவின் அரவணைப்பில் மகிழ்ந்திருந்த எனக்கு
என் தேவைகளை நானே சுயமாக செய்ய வேண்டும்
என்ற முதல் பாடத்தைக் கற்றுக் கொண்டேன்

வாடகை வீடு - கிணறோ நீர் வசதிகளோ எதுவுமே இல்லை
கழிப்பறை வசதிகள் எதுவுமில்லை - பயப்பட ஆரம்பித்தேன்.
"செல்லமாமா" என்னை ஆறுதல்படுத்தினார். இத்தேவைகளுக்கான
மரபுகளுக்கும், வழக்காறுகளுக்கும் என்னை ஆற்றுப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் கரைந்தோடின. அக் குடும்பத்தின்
இயல்பு வாழ்க்கைக்கு நான் பழக்கப்பட்டேன்.
மூவரும் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்தோம்.
மகிழ்ச்சிக்கு என்றுமே குறைவு இருந்ததில்லை.

நான்கு மணிக்கு துயிலெழுதல், ஐந்து மணிக்கு படிப்பு, ஏழு மணிக்கு பாடசாலை , ஐந்து மணிக்கு விளையாட்டு , ஆறுமணிக்கு மீண்டும் படிப்பு , ஒன்பது மணிக்கு இரவுணவு ,பத்து மணிக்கு நித்திரை இதுவே மாற்றமே இல்லாத எனது நாளாந்த வாழ்க்கை அட்டவணை.

"கருணை அன்ரி" அறுபது வருடங்களாக இறக்கும் வரை நட்பைப் பேணிய அன்ரியின் ஆருயிர்த்தோழி - வேலை முடிந்ததும் தன்வாழ்வில் நடக்கும் சிறு விடயங்களையும் சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேல் தினமும் பகிராவிட்டால் வள்ளி அன்ரிக்கு நிம்மதி இருக்காது இவர்கள் உரையாடல் முடியும் வரை எங்களுக்கு உணவிருக்காது.

நல்லரெட்ணம் ஆசிரியர் ஐயாவின் குடும்பம் அயல்வீடு
எங்களுக்கான நீர்த் தேவைகள் அங்கிருந்தே நிறைவு செய்யப்படும்.
தாசன் அண்ணன், சூரி அண்ணன், சந்திரா அக்கா, சாந்தி அக்கா, சக்தி,
நந்தன், சாந்தன், லிங்கன் என
ஏராளமான நல்ல உறவுகள் அங்கு எமக்கிருந்தன.

"தாஸ் அண்ணன் கடை" அங்குதான்
பொருட்கள் கொள்வனவு செய்வோம்.
கல்வியில் மிகுந்த அக்கறை காட்டுவார்.
முயற்சிக்கும், உயர்ச்சிக்கும் உதாரணம் காட்டி
என்னை கண்டிப்பதானால் அது தாஸ் அண்ணனைக் காட்டித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி,கல்வி,கல்வி, படிப்பு,படிப்பு,படிப்பு இதைத்தவிர வேறு விடயங்களுக்கு என்னை கண்டித்ததாக நினைவில்லை. OL , AL பரீட்சைகளில் சித்தியடைந்தேன். பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. அத்தோடு ஆசிரியர் வேலையும் கிடைத்தது.

என்னை ஆளாக்கி பெரிதாக சாதித்த பெருமை அன்ரியின் முகத்தில் தெரிந்தது.
மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.அனைவரிடமும் பெருமை பேசிக் கொண்டார்.
எதிர்கால திட்டமிடல்கள் பற்றி விளக்கினார்.என்னைப் பாராட்டினார்.
அன்ரியைப் பிரியும் காலம் வந்ததாக உணர்ந்தேன்.கவலை குடி கொண்டது.

அன்ரி வேறு வாடகை வீட்டில் குடி பெயர்ந்தார்.
நான் வேறு மாவட்டத்திற்கு தொழிலுக்காகச் சென்றேன்.
தொடர்புகள் நலியத் தொடங்கின.
தவணைக் கொரு தரம்,மாதத்துக்கொரு தரம் என சந்திப்புகள் அருகின.

செல்லமாமாவின் (தமையன்) மறைவு அன்ரியை மிகவும் பாதித்தது.
தனிமையில் வாழ வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாயிற்று.
மாணவர்களும்,அயலவர்களும்,உறவினர்களுமே ஆதரவு
காலங்கள் ஓடிக் கொண்டே இருந்தன.

அறுபது வயது- சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.
தன் உறவுகள் ஒவ்வொருவருக்கும்
சரீர,பொருளாதார,நிதி உதவிகளை செய்யத் தொடங்கினார்.
ஆன்மீகப் பணியில் அதிக நாட்டத்தை செலுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் புதிய வாடகை வீட்டிற்கு இடம்மாறினார்.
ஏராளமான மாணவர்கள் கற்பதற்காக வரத் தொடங்கினர்.
தன் சகோதரியைக், கூட அழைத்துக் கொண்டார்
இருவரும் ஒருவருக் கொருவர் ஆதரவாக இருந்தனர்.

திடீரென ஏற்பட்ட சகோதரியின் மறைவு
அன்ரியை மிக மோசமாகப் பாதித்தது.
மீண்டும் தனிமை அன்ரியை வாட்டியது.
நான் அடிக்கடி சென்று அவரைத் தேற்றிவந்தேன்.

இந்த இக்கட்டான நிலையில் என் மனைவியின் உறவு
அவருக்கு மிகவும் ஆதரவாக இருந்தது. அவரின் தேவைகளை முழுமனதுடன் செய்வார்.
அன்ரியின் 74 வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது
நாம் கைத் தொலைபேசி ஒன்றை அன்பளிப்பாக வழங்கி - எம்
அனைவருடனும் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்தினோம்.

வயதுக்கே உரித்தான தளர்ச்சியும் முதுமையும்
நோய் நொடிகளும் தலைகாட்டத் தொடங்கின
சகோதரியின் அரவணைப்பில் வாழ்ந்த அவர்
தன்னைப் பராமரிப்பதற்கு பேர்த்தி துஸ்யாவின்
உறவினை தெரிவு செய்து இடம்மாறினார்.

அடிக்கடி என்னை அழைத்தார். தன் மறைவுக்குப்
பிறகு தொடர்பான திட்டமிடல்களை கலந்துரையாடினார்.
தான் உதவ வேண்டிய உறவுகளை பட்டியலிட்டு
உதவத் தொடங்கினார்

தன் மறைவுக்குப் பிறகு செலவு செய்யத் தேவையான பணத்தினை
வைப்பிலிட்டு திட்டமிட்டார். என் மனைவியை அழைத்தார்
இறந்த பிறகு தனக்கு செய்ய வேண்டிய
காரியங்களை விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது 80 உடம்பு முழுவதும் முடியாமல்
போவதாக கூறினார். முழுப் பரிசோதனைக்காக
போதனா வைத்தியசாலையில் அனுமதித்தோம்.
மூன்று நாட்களில் தெம்பாகப் பேசினார்
வீட்டிற்கு அழைத்து வந்தோம்.

வைத்தியசாலையில் அவரைப் பராமரிப்பதற்காக
கூடநின்ற என் மனைவியிடம்
தனது கடைசி நாட்கள்
நெருங்கிவிட்டதாகக் கூறி
தன் வாழ்க்கை ரகசியங்கள் பலதை மனம் விட்டு கூறினார்.

வீட்டிற்குத் திரும்பி ஒரிரு நாட்கள் சென்றன
பார்வையிட வந்தவர்களிடம் பக்குவமாக பேசிக் கொண்டே இருந்தார்.
வெள்ளியன்று இரவு இறுதியாக சந்தித்தது வெற்றிவேல் அண்ணனை.
அவருக்கு விருப்பமான கிழங்கும், வடையும்
அன்றும் வாங்கியே வந்திருந்தார்.

வெற்றிவேல் அண்ணன் சென்றபின் விருப்பமான
உணவுகளை கதிரையில் இருந்தபடி உண்ண ஆரம்பித்தார்.
07.08.2020 நேரம் மாலை 06.45 நிசப்தம்!
தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கும் அன்ரியின் அமைதியில்
சந்தேகப்பட்டு
பேர்த்தி துஸ்யா அழைகின்றாள் "வள்ளிஅன்ரி, வள்ளி அன்ரி"

துஸ்யாவின்பதட்டமான தொலைபேசி அழைப்பைக்கேட்டு அனைவரும்
ஓடிவருகின்றோம் "வள்ளிஅன்ரி, வள்ளி அன்ரி" - பதிலில்லை
கதிரையில் கம்பீரமாக இருந்தபடியே
இறைவனுடன் இணைந்துவிட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயை பிரிந்த எனக்கு
என் சிறிய தாயின் மறைவு
இந்த உலகின் எங்கோ ஓர் மூலையில்
ஒரு சிறிய புள்ளியாக நான் இருப்பதாக உணர்ந்தேன்.

அன்பும் பாசமும் காட்டி என்னை வளர்த்த அன்னை
கல்வியும் அறிவும் தந்து என்னை ஆளாக்கிய ஆசான்
ஆசீர்வதித்து வாழ்த்துக் கூறி வழியனுப்பும் தெய்வம்
என் மனைவிக்கும், மகனுக்கும் நல்ல வழிகாட்டி

இத்தனையும் ஒரு நொடியில் கலைந்தது. தாயே!
பிறருக்கு நீங்கள் தீங்கு செய்தே நான் கண்டதில்லை
பிறரை மனம் நோகடித்தே நான் அறியவில்லை
இம்மையில் மறுமைக்குரியதை நீங்கள் அளவுக்கு அதிகமாகவே
சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள்.

நிச்சயம் சுவர்க்கம் உங்களை அழைக்கும்
எம் அனைவரின் பிரார்த்தனைகள் அத்தனையும்
அதற்கு வலுச்சேர்க்கும்
இறைவனின் திருவடியில் இனிதே இருப்பீர்கள்

தெய்வமாக நீங்களிருந்து எங்கள் அனைவரையும்
வழிநடத்தி ஆசீர்வதிக்க வேண்டும் அம்மா!
என் தாயே வணங்குகின்றேன்
உங்கள் ஆன்மா இறைஅடியில் சுகித்திருக்க பிரார்த்திக்கின்றேன்

அன்பு மகன்,
திரு.சோ.சுந்தரமோகன் (பாபு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அன்னை

பல ஆண்டு உறவாய் இருந்தீர்கள்
ஊரிலிருந்து இங்கு வந்த போது
உறவினராய் எம்மை ஆதரித்தீர்கள்
உறவினராயும் அயல்வீட்டவராயும்
எம்முடன் துணையாய் இருந்தீர்கள்
வீட்டில் தனியாக இருக்கும்
போது துணையாக எங்களுடன்
இருந்து எங்கள் தனிமையை நீக்குவீர்கள்
எல்லா இடரான நிலையிலும்
வள்ளி அன்ரி என்று அழைத்தவுடன்
வந்து நிற்பீர்கள்...
பக்கத்து வீட்டிலிருந்து நீங்கள் சென்றாலும்
நமக்கு இடையிலான உறவில் மாற்றமில்லை
தூரம் நம் உறவைப் பிரிக்கவில்லை
எங்கு சென்றாலும் தொலைபேசியில் உரையாடி
உறவை வளர்த்தீர்கள் - சந்தர்ப்பம் கிடைக்கும்
போது வீட்டிற்கும் வந்து சென்றீர்கள்.
நீங்கள் இறந்த செய்தி கேட்டதும்
அதை நம்பவும் முடியவில்லை
நீங்கா நினைவுடனே - எம் குடும்பம்
அன்பான உங்கள் ஆன்மா ஆத்ம
சாந்தியடைந்து அமைதியுற தினம்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
**மாமி குடும்பம்**
(துறைநீலாவணை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

01. இலட்சியம் இல்லாத மனிதன் இறக்கை இல்லாத பறவை
02. நிதானத்தை கடைப்பிடி அதுவே முதற்படி
03. அறிவு இருந்தால் அகிலத்தை ஆளலாம்
04. கடுமையாக உழைப்பவனும், கனிவாக பேசுபவனும் வாழ்க்கையில் சிறப்பான்.
05. அமைதியை விட மேலான மகிழ்ச்சி எதுவும் இல்லை
06. ஆசை உள்ளவரை வேதனையும் கூடவே வரும்
07. நல்லதை செய்வதாகவே இருந்தாலும்கூட நிதானித்துத்தான் செய்ய வேண்டும்.
08. பயணம் தொடக்கத்தில் கல்வி, அதுவே பின்னர் அனுபவம்
09. மற்றையவர்களை மதிப்பவர்களை எல்லோரும் மதிப்பார்கள்.
10. விதைக்கப்படுவது எதுவோ அதுவே விளைந்து பயன் தரும்.
11. உனது நம்பிக்கை போதும் உனது ஆற்றலும் அதற்கேற்ப உயரும்.
12. சிறந்ததும் முதன்மையானதுமான வெற்றி தன்னைத்தானே வெல்வதாகும்.
13. ஒழுக்கம் என்பது பேராறு நற்பழக்கங்கள் அதன் கிளையாறு
14. தொண்டுதான் உண்மையான அன்பை வெளிப்படுத்துமே தவிர வெறும் வாய்ச் சொல்லால் பயனில்லை.
15. மகிழ்ச்சியும் உழைப்பும் வாழ்நாளை வளர்ப்பவவை.
16. வெற்றி பெறுவது எப்படி என்று பேசுவதை விட தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப்பார். நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்.
17. வந்தால் மீண்டும் எம்மை விட்டு போகாதவை புகழும், பழியும்.
18. எம்மிடம் தானாகவே வருபவை இளமையும், முதுமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. தேவையில்லாதபோது பேசாது இருங்கள் சரியான நேரத்தில் தெளிவாகச் சொல்லுங்கள்.

20. மனிதனின் அதிஷ்டம் அவன் தலைவிதியில் இல்லை, அவன் நடத்தையில்தான் உள்ளது.

21. காலத்தின் அருமையை புரிந்து கொள்ளாதவர்கள் வெற்றியடைவது கடினம்.

22. ஒரு தவறை செய்யும் போது மனிதன் ஒரு படி தாழ்ந்து விடுகிறான்.

23. தவறு செய்தவன் மனதார அந்தத் தவறை ஒப்புக் கொண்டு வருந்தும் போது அவன் ஒருபடி உயர்ந்து விடுகிறான்.

24. வருவது எதுவாய் இருந்தாலும் அதை எதிர்கொண்டு வாழ்பவர்களுக்கே வெற்றி நிச்சயம்

25. சிந்தித்து நாவை பயன்படுத்து எல்லா விடயமும் பிரச்சினை இன்றியே அமையும்.

26. நீ எதைச் செய்தாலும் அது மற்றவர்களின் மனதை புண்படுத்தாது இருப்பது நல்லது.

27. வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.

28. உண்மையைச் சொல்லி நன்மையை செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும்.

29. விழிப்பதற்கே உறக்கம், வெல்வதற்கே தோல்வி, எழுவதற்கே வீழ்ச்சி.

30. சுமை தாங்கியாய் இரு பிறர் மேல் சுமத்தாதே.

31. ஒருவர் பேசும் பேச்சில் அவர் உள்ளத்தின் நல்ல கெட்ட தன்மையை அறியலாம்.

32. யாரிடமாவது கண்டிக்கத்தக்கது காணப்பட்டால் பிறரிடம் சொல்லக்கூடாது, அதை அவரிடமே கூறுவதுதான் அறிவுடைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33.** சாதனை படைக்கத் துடிப்பவன் அடுத்தவன் கூறும் விமர்சனக் கருத்துக்களை கேட்க மாட்டான்.

**34.** சிரியுங்கள் உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும், அழுங்கள் நீங்கள் ஒருவரே அழுதுகொண்டிருப்பீர்கள்.

**35.** எமது மனதில் தோன்றும் சிறிய சிந்தனைகள்தான் எம்மை முழுமையடையச் செய்கின்றன.


**36.** எதை? யாரிடம், எப்போது? எப்படி சொல்ல வேண்டுமோ அதை உரியவருக்கு உரிய சமயத்தில் உரிய விதத்தில் சொல்ல வேண்டும்.

**37.** ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல, விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

**38.** எனக்கென்று உள்ளதை எவருக்கும் தடுக்க முடியாது, எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியாது.

**39.** உனது விடுதலைக்குரிய வழி உன்னிடம் உண்டு.

**40.** கடின உழைப்பு, சோர்வில்லாத மனம், நல்ல விதி இவை மூன்றுமே எந்தவொரு மனிதனுக்கும் வெற்றிக்கு வேண்டியவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகளின் 25வது வருட வெள்ளிவிழாவில் மகனுடன்...



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்
ஆலயத்தில் பேரனுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மங்கல விளக்கேற்றல்



மகளின் நூல் வெளியீட்டில் சிறுவர் கதை
நூலை மேடையில் பெற்றுக்கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகு வைத்தியம்

**தீராத சளித் தொல்லை நீங்க எளிய வைத்தியம்**

02 டம்ளர் தண்ணீரை எடுத்து, காம்பில்லா நீர் வெத்திலை 02 சிறுதுண்டாக்கி இடித்த மிளகு, சிறிய சீரகம், இஞ்சி, மஞ்சள் தூள் கலந்து கொதிக்கவைக்கவும். 1/2 டம்ளர் வரும் வரை காய்ச்சவும் சாப்பிட 1/4 மணி நேரத்திற்கு முன் அல்லது பின் குடிக்கவும் ஒரு நாளைக்கு 02 தடவைகள் (காலை, மாலை)
03 நாளில் சுகம்தெரியும்.

**சளி நீங்க இலகு வைத்தியம் -**

மிளகைப் பொடி செய்து சுத்தமான தேனுடன் கலந்து (வயதுக்கு ஏற்ப) ஒரு நாளைக்கு 02 தடவைகள் சாப்பிட்டு வர ஒரு வாரத்தில் குணமாகும்.

**வாயுத் தொல்லை உடனே நீங்க**

நீர் வெற்றிலையுடன் மிளகு சேர்த்து நன்றாகச் சப்பிச் சாப்பிட்டு சிறிது நேரத்தில் சுடு நீர் அருந்தவும், வாயுத் தொல்லை உடனே நீங்கும்.

பெருங்காயம் சிறு துண்டு, கராம்பு 03 இரண்டையும் பொடி செய்து சுடு நீரில் கரைத்து இளம் சூட்டில் தேசிச் சாற்றைக் கலந்து குடிக்க வாயுத் தொல்லை நீங்கும்.

## எம்மைக் காக்கும் நாராயண மந்திரங்கள்

| | |
|---|---|
| மருந்து சாப்பிடும் போது | ஓம் தன்வந்திரி பகவானே நமோ நம |
| சாப்பிடும் போது | ஓம் யனார்த்த நாமாய நமோ நம |
| உறங்கும் போது | ஓம் வசிரங்க நாமாய நமோ நம |
| திருமணத்தின் போது | ஓம் இலட்சுமி நாராயண நமோ நம |
| எதிரிகளினால் துன்பம் வரும்போது | ஓம் சுதர்ச நாமாய நமோ நம |
| கெட்ட கனவு வரும் போது | ஓம் கோவிந்த நாராயண நமோ நம |
| கஸ்ரம் வரும் போது | ஓம் மது சூதனாய நமோ நம |
| நெருப்புச் சுட்டால் | ஓம் வசி மகா விஷ்ணுவே நமோ நம |
| நீரினால் ஆபத்து வந்தால் | ஓம் வராக மூர்த்தியே நமோ நம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஸ்து – வீடு அமைய வேண்டிய அடிப்படை வாஸ்து மூலைகள்

| | | |
|---|---|---|
| *1.* | சுவாமி அறை | - நிருதி மூலை – தென்மேற்கு |
| | | - பிரம்மஸ்தானம் |
| | | - ஈசான மூலை – வட கிழக்கு |
| *2.* | சமையலறை | - அக்கினி மூலை – தென்கிழக்கு (உத்தமம்) |
| | | - வாயு மூலை - வடமேற்கு (மத்திமம்) |
| *3.* | படுக்கையறை | - அக்கினி மூலையை தவிர்க்கவும் |
| *4.* | குளியலறை | - வாயு மூலை - வடமேற்கு |
| | குளித்தல் | - கிழக்கு நோக்கி |
| | கொமட் | - வடக்கு தெற்கு நோக்கி இருத்தல் சிறப்பு. |

*5.* யன்னல் கதவுகள் - வடக்கு, கிழக்கில் அதிகம் வைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி அறை

படங்கள் - கிழக்கு நோக்கி வைக்கலாம் - உத்தமம்
வடக்கு - மத்திமம்

- இறந்தவர்களின் படங்களை சுவாமியறையில் வைக்கக் கூடாது
- 1/2 அடி க்கு மேற்பட்ட உருவச் சிலைகளை தவிர்க்கவும்
- பணம் கொட்டும் இலட்சுமியின் படத்தினை வீட்டின் உட்புறமாக வீட்டை நோக்கி வைக்கவும்
- ஒரே கடவுளின் இரு படங்களை வைப்பதை தவிர்க்கவும்.
- ஆண்டி முருகன் படத்தை தவிர்ப்பது நல்லது
- வாகனங்களில் விபத்துக்கள் ஏற்படாமல் காக்க வள்ளி தெய்வானையுடன் உள்ள முருகனின் உருவப் படத்தை வைக்கலாம்.
- கதவு வெளிப்புறம் திறக்குமாறு அமைப்பது சாலச் சிறந்தது
- படங்களை ஒன்றுடன் ஒன்று இணைத்து வைக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கேற்றும் முறை


- சுவாமி அறையின் அக்கினி மூலையில் விளக்கு ஏற்றுவது உத்தமம்.
- மின்சார கலர் விளக்குகளை சுவாமி அறையில் தவிர்க்கவும்
- ஐந்து முக திருவிளக்கில் நெய் தீபம் ஏற்றுதல் மிகவும் சிறப்பு
- சுத்தமான உருக்கெண்ணையுடன் சிறிதளவு நெய் விட்டும் ஏற்றலாம்
- விளக்கிற்கு நிவேதனம் வைத்தல் வேண்டும்
- விளக்கை அடிக்கடி இடம்பெயர்த்தக் கூடாது
- தட்டில் அரிசியை வைத்து அதில் விளக்கை வைக்கலாம் நிலத்தில் வைக்கக் கூடாது
- குலதெய்வ பூசையில் வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், பசுநெய் மூன்றையும் கலந்து விளக்கேற்ற வேண்டும்
- திரு விளக்கிற்கு எட்டு இடங்களில் பொட்டிட வேண்டும்.
- செந் நிற துணியில் திரியிட்டு தீபம் ஏற்ற திருமணத் தடை நீங்கும், மகப்பேறு கிட்டும்
- வெண்ணிற திரி உத்தம பலன்கள் அனைத்தையும் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது 75 வது பிறந்தநாளின் போது...



தனது 75 வது பிறந்தநாள்
கொண்டாட்டத்தின்
போது தன் தோழிகளுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பூட்டனின் 1வது பிறந்த தினத்தின் போது...



தனது செல்லப்பிராணிகளுடன் மகிழ்வாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் என்பது

## மரணம் என்றால் என்ன?

அது உயிர் உடலை பிரிவது. இது வாழ்க்கையின் தொடக்கம். மரணத்தினால் உயிரும் அதன் அறிவு வளர்ச்சியும் அழிந்து போவதில்லை. பிறந்த ஒவ்வொருவரும் இறக்கின்றார்கள். இறந்த பின் உயிர் வாழ்கின்றனர். மரணம் என்பது நாம் ஒரு வீட்டை விட்டு இன்னுமோர் வீட்டில் வாழ்வது போன்று. நாம் கிழிந்து போன உடையை எறித்து விட்டு புதிய உடையை அணிகின்றோம். அது உயிர் உடலை விட்டு புதிய உடலினுள் நுழைவது போலாகும். உயிர் மேலும் அனுபவங்களைப் பெற்று வளர்ச்சியடைவதற்கு மரணம் இன்றியமையாத நிகழ்வாகும் இறப்பையும் பிறப்பையும் தூங்குவதற்கும், விழிப்பதற்கும் ஒப்பிடலாம். தான் இருக்கும் உடல் வாழத் தகுதியற்றதாகும்போது உயிர் தன்னை விட்டுப் பிரிகின்றது. ஒரு உடலில் உயிர் புகுவது பிறப்பு எனவும் அதனை விடுவது இறப்பு எனவும் கூறப்படுகின்றது.

## மரணக் கிரியை தொடர்பான சில விளக்கங்கள்.

01. இறுதிக் கடன்களை பெண்கள் ஏன் செய்வதில்லை?

இந்த தர்மம் மனுநீதியை அடிப்படையாகக் கொண்டது. அது கணவனுக்கு விருப்பமான பணிகளை செய்யத்தான் பெண்களுக்கு உரிமை வழங்குகின்றது. பெற்றோர்களின் பாவ, புண்ணியங்களை ஆண் பிள்ளைகளே ஏற்பதால் அவர்களே இறுதிக் கடன்களைச் செய்யத் தகுதியானவர்கள்.

02. உடலை எரியூட்டும் முன் தண்ணீர் நிறைந்த பானையில் மூன்று துளைகள் இட்டு பின்னர் அதை உடைப்பதன் தத்துவம் என்ன?

நாம் இறந்த பிறகு பூமியில் செய்த பாவத்திற்கான சிரமத்தை அனுபவிக்க நம் ஜீவன் நரகட், ரௌரவம், மகாரௌரம் என்னும் மூன்று லோகங்களுக்கு அனுப்பப்படும் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தண்ணீர் கிடையாது ஆனால் பானையில் தண்ணீர் நிரப்பி மூன்று முறை சுற்றி வந்து உடைக்கப்படுகின்றது. அந்த தண்ணீர் எந்த லோகத்தில் இருந்தாலும் இறந்தவர்களைச் சென்றடையும் என்பதே நம் பெரியோர்களின் நம்பிக்கை. ஒரு குழந்தை பிறக்கும் போது தாயின் பனிக்குடத்தில் மூன்று துளைகள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. நாம் பிறந்த வழியிலே உலகை விட்டுச் செல்வதற்காக இந்தச் சடங்கு என்ற விளக்கமும் தரப்படுகிறது.

***03.*** ஒருவன் இறந்த பிறகு அவரின் உடலுக்கு அருகில் தேவாரம் போன்ற பக்திப் பாடல்களைப் பாடுவதற்கான காரணம் என்ன?

உயிர் பிரியும் ஒருவரின் உணர்வுகள் உடனடியாப் பிரிவதில்லை என்று கூறப்படுகின்றது. அதனால்தான் நாம் உச்சரிக்கும் மந்திரங்களை மாண்டவரின் ஜீவனால் கேட்க முடியும் என்ற வேதத்தின் கர்ம காண்டமும், இறந்தவருக்கருகில் கடவுளின் நாமத்தை உச்சரிப்பதில் பாவம் குறைந்து அடுத்த ஜென்மத்தில் அவர் உயர்ந்த ஜீவனாக பிறக்க வழியேற்படும் என்று கூறகின்றது.

***04.*** அஸ்தியை கடலில் கலப்பது ஏன்?

புண்ணிய நதிகள் யாவும் கடலில் கலக்கின்றன. அஸ்தியை கடலில் கலப்பதால் அனைத்து புண்ணிய நதிகளும் கலப்பதாக பொருள். இந்த ஜீவன் மறுபடியும் உலகின் எந்தப் பகுதியிலும் பிறக்கலாம் என்பதால் சரீரத்திற்கு மூலாதாரமான அஸ்தி கடலில் விடப்படுகிறது.

***05.*** இந்துக்களை எரிப்பது சரியா? அல்லது புதைப்பது சரியா?

சந்நியாசிகளை மட்டுமே மண்ணில் புதைக்கலாம் என்று இந்து தர்மம் கூறுகின்றது. அவர்களின் உயிர் மண்டைக் குழியிலிருந்து விடுபட்டதாக இருத்தல் வேண்டும். சாதாரணமானவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர், கண், மூக்கு, வாய், காது, குறி ஆகியவற்றின் வழிபோகும் உஷ்ணத்தில் உருவாகும் இவ் உடல் உஷ்ணத்திலேயே (நெருப்பிலே) வேக வேண்டும் என்று கூறப்படுகிறது. 11 வயதுக்கு குறைவான ஆண் பிள்ளையாயினும் 7 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைகளாயினும் அவர்களைப் புதைக்க வேண்டும்.

06. வீட்டில் மரணம் ஏற்பட்டு எத்தனை நாட்களுக்கு பின் கோயிலுக்குச் செல்லாம்?

தந்தை அல்லது தாயாரை இழந்த பெரிய மகள் (கடமையைச் செய்தவர்) ஒரு வருடத்திற்கு ஊர் எல்லையை தாண்டக் கூடாது என்று மனுநீதி கூறுகின்றது. ஆனால் இது இப்போதைக்கு சாத்தியமில்லை. ஆனால் முப்பது நாட்கள் கழிந்த பின்னே கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

07. இறந்தவர்களுக்கு வாய்க்கரிசி போடுவதன் காரணம் என்ன?

இந்துக்களின் சடங்குகளில் அரிசி மிகுந்த முக்கியத்துவம் உடையது. மனிதன் தனது வாழ்க்கையில் நடாத்தும் போராட்டம் அனைத்தும் அடிப்படையில் உணவுக்கே. இறந்தவர்களுக்கு நாம் போடும் அரிசி அவருக்கு வாய்க்கும் இறுதி அரிசி ஆகும். மணமக்களை ஆசீர்வதிக்கும் போதும் அரிசி போடுகின்றோம். இது மஞ்சள் அரிசி மங்களத்தைக் குறிக்கும். ஆனால் வாய்க்கரிசி போடும்போது மஞ்சள் சேர்க்கக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணச் சடங்கு தொடர்பான விடயங்கள்

**மரணச் சடங்கு :**
மரணச் சடங்கினை சாவீட்டுக் கிரியை, மரணக்கிரியை, செத்த வீட்டுக் கிரியை, பிரேதக்கிரியை, சவக்கிரியை, உத்தரக்கிரியை, அபரக்கிரியை போன்ற பெயர்களால் குறிப்பிடுகின்றனர்.

**அபரக்கிரியை :**
அபரம் என்றால் பிந்தியது, உடலைவிட்டு போனபின் செய்யப்படுவது என்பது பொருள்.

**மரணக்கிரியை செய்யத்தக்கவர்கள் :**
சைவக்குருக்கள் அவர் நல்லறிவு, ஒழுக்கம், கிரியை, விளக்கம் அக்கினிகாரியம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

**சாவது உடலா? உயிரா?**
சாவது உடல்தான் உயிர் அனாதியாக உள்ள பொருள் அது அழிவது இல்லை. பல பிறவிகளை எடுத்தெடுத்துச் செய்த வினைகள் எல்லாம் தீர்க்க பின் சிவகதி சேர்ந்து இன்புற்றிருக்கும்.

**உயிர் வாழ்வின் மூன்று நிலைகள் :**
இம்மை : இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் நிலை.
மறுமை : இவ்வுடல் இறந்த பின் வேறு உடல் எடுத்து வாழும் நிலை.
அம்மை : வினைத் தொடர்புகள் எல்லாம் நீங்கிய பின் சிவகதியில் இன்புறும் நிலை.

**உடல் உயிரை விட்டுப் பிரியும் உறுப்பு :**
இந்த உடலுக்கு கண்கள் இரண்டு. காதுகள் இரண்டு. மூக்குத்துவாரம் இரண்டு. வாய், மலவாசல், சலவாசல் ஆகிய ஒன்பது வாசல்கள் உள்ளன. இதில் ஏதாவது ஒரு வாயிலால் வெளியேறும் போது அவதானித்தால் அந்த வாயிலில் அசைவு தெரியும்.

**இறந்தவுடன் கை, கால், விரல்களை கட்டுதல் :**
உயிர் போய் சிறிது நேரத்தில் உடல் விறைத்துவிடும். விறைக்குமுன் உடலை நேராக வளர்த்திக் கை விரல்கள், வாய் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிக் கட்டிவிட்டால் உடல் ஒழுங்காக இருக்கும் என்பதற்காக சீலைத்துணியால் கட்டப்படும் கிரியையின் போது அவை அவிழ்க்கப்படும்.

**பிரேதம் வைக்கப்படும் இடத்தின் மேல் வெள்ளை கட்டுதல் :**

இதுவரை உடலை ஆதாரமாக கொண்டிருந்த உயிர் உடலை விட்டு வெளியேறுவதும் ஆதாரமின்றி அந்தரப்படும் உயிர் தாங்குவதற்காகவே புதிய தூய்மையான வெள்ளை கட்டப்படுகின்றது.

**தலைமாட்டில் நெய் விளக்கு ஏற்றுதல் :**

உடலை விட்டு வெளியேறிய உயிர் இருட்டில் அலையாமலும், அது செல்லும் வழிக்குத் தெய்வீக ஒளி உண்டாகவும், சிவசிந்தனையை அந்த இடத்தில் உண்டாக்குவதற்கும் தலைமாட்டில் நெய் விளக்கு ஏற்றப்படுகின்றது.

**இறந்த இடத்தில் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைத்தல் :**

உயிர் உடலைப் பிரிந்து முப்பத்தொரு நாளும் அங்கு இருக்கும். அதன் பசி, தாகத்தைத் தீர்ப்பதற்காக இறந்த இடத்தில் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைக்கப்படுகின்றது.

**வாய்க்கரிசி போடுதல் :**

இறந்தவர் பசி, தாகத்துடன் செல்லக்கூடாது என்பதற்காகவும், இதுவரை காலமும் உணவு தந்தவரிற்கு வாய் நிறைய அரிசி போடப்படுகின்றது. வீட்டில் பெண்களும், மயானத்தில் ஆண்களும் வாய்க்கரிசி போடுவர். இது மன ஆறுதலுக்காகச் செய்யப்படுகிறது.

**இறந்தவரின் உடலை வைத்தல் :**

இறந்தவரின் உயிர் செல்லும் திசை தெற்கு (தென் புலம்) ஆகும். ஆதலால் தலை தெற்குப்பக்கமாக இருக்கும் படி வைத்தல் வேண்டும்.

**சுடலையில் பிரேதத்தைச் சுற்றுதல் :**

பிரேதத்தை சுடலையில் சுற்றும் போது மூன்று முறை இடப்பக்கமாகச் சுற்றிவந்து தலைப்பக்கம் தெற்கே இருக்கக்கூடியதாக வைக்க வேண்டும். அபயக்கிரியையில் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாகவே நடைபெற வேண்டும்.

**கருமங்கள் நடைபெறும் தடவைகள் :**
இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள உண்மைப் பொருட்கள் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுமாகும். ஆதலால் கருமங்கள் சரியாக நிறைவேற்றுவதற்கு மூன்று முறை செய்யப்படும். மூன்று முறையில்தான் யாவும் பூரணமாவது நியதியாகும்.

**அரிசி, தேங்காய்த் துண்டுகள், மஞ்சள், நெற்பொரி எறிந்து செல்லல் :**
பிரேதம் போகும் வழியில் எதிர்ப்படும் பேய் பிசாசு மற்றும் துர்தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காக அரிசி, தேங்காய்த் துண்டுகள், மஞ்சள், நெற்பொரி எறிந்து செல்லப்படுகின்றது.

**மூன்று பிடி மண் போடல் :**
உரிமைக்காரர் பிரேதத்தின் தலை, நெஞ்சு, கால் ஆகிய மூன்று இடங்களில் போட வேண்டும் இதுவே மூன்று பிடி மண் போடல் எனப்படுகிறது.

**பிரேதம் எரிந்த சாம்பலை புண்ணிய தீர்த்தத்தில் இடல் :**
நாம் உயிருடன் இருக்கும் போது புண்ணிய தீர்த்தத்தில் நீராடினால் எங்கள் உடல் குற்றமும், உயிர்க் குற்றமும் நீங்குவது போல இறந்த பின் சாம்பலை அங்கு கரைப்பதால் இறுதியாக அவரிடமிருந்த குற்றங்கள் நீங்கும் என்பதற்காக பிரேதம் எரிந்த சாம்பலை புண்ணிய தீர்த்தத்தில் இடப்படுகிறது.

**31ம் நாள் அந்தியேட்டி :**
உடலை விட்டு பிரிந்த உயிர் 31 நாட்கள் அந்த இடத்திலேயே நிற்கும் என்பது சாத்திர உண்மை. 31ம் நாள் கிரியையுடன் அது செல்ல வேண்டிய கதிக்குச் செல்லும். ஆதலால் இறுதியில் செய்யப்படுவதாகிய கருமம் இதுவாகும்.

**பிதிர் கடன் செய்தல் :**
பிதிர் கடன் சிரத்தையோடு செய்யப்படுவதால் சிரார்த்தம் எனப்படும். இறந்தவரின் ஆன்மா எந்த நிலையில் எங்கிருந்தாலும் அவர் பெயரில் செய்யப்படும் சிரார்த்தங்கள், தான தர்மங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனை பிதிரர்கள் அவருக்கே சேர்ப்பார். ஆனால் அவர் சாந்தியும், ஆன்ம ஈடேற்றமும் அடைய செய்தவருக்கு ஆசியும் வழங்குவார். ஆடி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் பிதிரர்கள் பூமியை நோக்கி வந்து தான தர்மங்களை ஏற்கும் காலம் என ஞானியர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆதலால் இக்காலங்கள் பிதிர்கடன் செய்ய உகந்தவையாகும். ஆடி அமாவாசையும் புரட்டாதி மஹாளய பட்ஷமும் இதற்கு விஷேட காலங்களாகும். பொதுவாக சிரார்த்தம் செய்யும் காலங்களிலும் செய்வது சிறந்தது. தந்தையாம் தன்மையுடைய சூரியனின் கிரகணங்கள் (கதிர்கள்) அமாவாசைக் காலத்திலும், தந்தையாம் தன்மையுடைய சந்திரனின் கிரகணங்கள் (கதிர்கள்) பூரணையிலும் பூமியில் தாக்கத்தை உண்டாக்குவதால் பிதிரர்கள் பூமியை நோக்கி வரும் காலமாகும். ஆதலால் தந்தைக்கு அமாவாசையும், தாய்க்கு பூரணையும் உகந்தவையாகும்.

மூலம் : ஆத்மா விமோசனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 27 * 12 * 1940



இறைவன் அடியில் 07 * 08 * 2020

மட்டக்களப்பு கல்லடி உப்போடையை பிறப்பிடமாகவும்
கல்லடி வேலூரை வசிப்பிடமாகவும் கொண்ட

## இளையதம்பி வள்ளியம்மை

[ஓய்வு பெற்ற சமநல சேவை நிலைய எழுதுநர், முன்னாள் அறநெறிப் பாடசாலை ஆசிரியை]

அவர்கள் 07.08.2020 அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார்

காலஞ்சென்றவர்களான இளையதம்பி-தங்கம்மா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வியும்,
காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, இராசம்மா, செல்லையா ஆகியோரின் சகோதரியும்,
காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி, முருகுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும்
காலஞ்சென்றவர்களான செல்லம்மா-நாகமுத்து ஆகியோரின் பெறாமகளும்,
காலஞ்சென்றவர்களான பூரணமதி, இராசையாவின் உடன்பிறவா சகோதரியும்,
காலஞ்சென்ற நல்லதம்பியின்(கந்தக்குட்டி) மருமகளும்,
மகேஸ்வரி, அழகம்மா, காலஞ்சென்ற இராமலிங்கம், கணேசமூர்த்தி, மாரிமுத்து, சுந்தரி,
சுந்தரமூர்த்தி, செல்லத்தங்கம், காலஞ்சென்ற இரத்தினப்பாக்கியம்,
காலஞ்சென்ற கோகிலாதேவி, சரோஜா மற்றும் காலஞ்சென்ற பாலசுந்தரம், சுந்தரமதி, கலாமதி,
சுந்தரமோகன், இளங்குமரன், சிவகுமாரி ஆகியோரின் சிறியதாயாரும்,
சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற சண்முகராசா, இந்துமதி, ராகினி, ஜெயமங்களம்,
லோகிதராஜா, கந்தலிங்கம், சிவனேசன் ஆகியோரின் மாமியும்
பிரியகலா, சுரேந்திரன், காலஞ்சென்ற மகேந்திரன், பிறேமா, விமலா, விஜயா,
பிறேமரத்னம், சுமணா, சுபாஸ்கரன், சுதர்சினி, ரூபாகரன், வதனி, கௌசல்யா, மங்களேஸ்வரன், அபிநயா,
ஜனார்த்தனி, லோஜினி, ரமாஜினி, சுகாசினி, அமிர்தசாரவணன், துஷ்யா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 2020.08.08 சனிக்கிழமை அன்று பிற்பகல் 04.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் இருந்து கல்லடி உப்போடை
இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.26, காளிகோயில் வீதி(4ஆம் குறுக்கு)
கல்லடி வேலூர், மட்டக்களப்பு

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

## அமரர். இளையதம்பி வள்ளியம்மை

தோற்றம்
27.12.1940

மறைவு
07.08.2020



இளையதம்பி வள்ளியம்மை எனும்
பெயர்தாங்கி வந்தீர்
உற்றார், உறவினர் ஊரார்
நலம் ஓம்பி நின்றீர்
கற்றோம்பி கைத்தொழில்சார்
உத்தியோகம் கண்டீர்
பெற்றோரும் பெருமை கொள்ள
வாழ்ந்து நின்றீர்
சகோதரன், பெறாமகன் வாழ்வில்
கொழுகொம்பாய் ஆனீர்
எழுத்தறிவித்தவன் இறைவன் என்றுணர்ந்து
பல குழந்தைகள் வாழ்வில் இறைவியானீர்
எல்லோரும் இன்புற்றிருப்பதல்லால்
வேறொன்று வேண்டேன் பராபரமே
என்ற நல் மனமும் கொண்டீர்
பற்றில் பற்றறுத்த வாழ்வும் கண்டீர்
எங்கள் மூத்தோர் தலைமுறையின்
எச்சமாய் வழிகாட்டி நின்றீர்
இன்று காலனவன் விதி முடிக்க
ஆழ்ந்த உறக்கம் கொண்டீர்
யார் பெறுவார் இத்தகைய
புனித வாழ்வும், புனித சாவும்?
விழிநீர் சிந்தி ஏங்குகின்றோம்
எம் தாயின் விம்பமாக நின்று
எமை நெஞ்சில் சுமந்த எங்கள்
சிற்றன்னைக்காக ..........
ஏங்குகின்றார் எம்மக்கள்
தங்கள் அம்மம்மாவுக்காக..............

அமரர். செகந்தரம் பூரணமதி
குடும்பத்தினர்

Gowry4Graphic










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


கடந்த 07.08.2020 அன்று இறைபதமடைந்த

எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர்**

## இளையதம்பி வள்ளியம்மை

அவர்களின் மரணச் செய்தி கேட்டு வருகை தந்து உடனிருந்து ஆறுதலளித்ததுடன் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள், பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதலும், அனுதாபமும் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் அனைத்து காரியங்களிலும் அல்லும் பகலும் அயராது உழைத்த உறவுகள், உற்றார்கள்,. பாசமிகு நண்பர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதையின் பாதை

சோம்பலும் செயலிழந்த நிலையும்
கோழைகளுக்கே
உரியது அவை உனக்கு வேண்டாம்.
பலவீனங்களை தூக்கியெறிந்து வாழ்க்கைப்
போராட்டத்திற்கு ஆயத்தமாகு.
துக்கங்கள் ஏற்படுவது விதி என்று கருதி
அடிபணிகின்றவன் பாவம் செய்கின்றான்
எதிர்ப்பைக் கண்டு அடிபணியாதே.
போராடக்கற்றுக்கொள்.
ஓடி ஒளிந்துகொள்வது பிரச்சினைகளுக்குத்
தீர்வாகாது.
எதுவந்தாலும் முனைப்போடு எதிர்கொள்.
உலகத்தைத் தலைகீழாக மாற்றக்கூடிய சக்தி
உனக்குண்டு.
அதை வெளிக்கொண்டுவா.
இந்த தர்மயுத்தத்தை விட
மேன்மைதரக்கூடியது வேறு
எதுவும் இல்லை.
இதில் உயிரை விட நேர்ந்தாலும்
உயர்வேதான்.
தர்மயுத்தத்தில் இறக்கக்கூடியவனுக்கு உலகில்
எல்லாமே கிடைக்கும்.
கடமையில் இருந்து விலகுகின்றவன்
அனைத்தையும் இழக்கின்றான்.
செயலில் இறங்க ஆயத்தமில்லாத
தனிமனிதனும்
சமுதாயமும் ஆபத்தை வரவழைத்துக்
கொள்கின்றன.
எனவே எழுந்து நில். எதிரிகளை தோற்கடித்து
வளமான இராஜபோகத்தை அனுபவி.
அழிவில்லாத வெற்றியை அடைவாய்.
நல்வாழ்வும் செல்வங்களும் வீரனான
உனக்கே உரியவை.

பகவான் ஸ்ரீ கிருஸ்ண பரமாத்மா

எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட், மட்டக்களப்பு. 065 2222607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org